**சார்பு நீதிமன்றம். அருப்புக்கோட்டை.**
**முன்னிலை: திரு.R.சதீஷ், M.L.,**
**சார்பு நீதிபதி. அருப்புக்கோட்டை.**
**2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் நாள் வியாழக்கிழமை**
**அ.வ.எண்.90/2026**
**CNR.No.TNVR13-000219-2026**

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை டவுண், திருச்சுழி ரோடு, பசும்பொன் முத்துராமலிங்க தேவர் தெரு, கதவு எண்.6 என்ற முகவரியில் வசிக்கும் பாண்டி மகன், சுமார் 60 வயதுள்ள நாகராஜன்.

... வாதி

– எதிர் –

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை டவுண், இராமசாமிபுரம், காளியம்மன் கோவில் தெரு, க.எண்.7 என்ற முகவரியில் வசிக்கும் சக்திவேல் மனைவி, சுமார் 56 வயதுள்ள ஜானகி.

... பிரதிவாதி

வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய தொகை ரூ.1,55,600/–ம் மேற்படி தொகைக்கு பிராது தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரை 12% பின்வட்டி சேர்த்து செலுத்தக்கோரியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | : | 17.03.2026, 06.04.2026 |
| நீதிமன்ற கட்டணம் | : | தாவா வழக்கின் மதிப்பு ரூ.1,55,600/– என மதித்து அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 22–ன் படி ரூ.4,668/– நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. |
| வியாஜ்ஜிய மூலம் | : | 22.11.2023 மற்றும் 23.01.2026 ஆகிய தேதிகளில் உற்பத்தி. |

இவ்வழக்கு 25.06.2026ம் தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.இ.வீரராஜ் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் யாரும் ஆஜராகாததால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், மேலும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## **<u>தீர்ப்பாணை</u>**

1. **வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.**
2. **வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய தொகை ரூ.1,55,600/-ம், அதில் அசல் தொகை ரூ.1,00,000/-க்கு பிராது தேதி முதல் தீர்ப்பாணை தேதிவரை ஆண்டுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை ஆண்டுக்கு 6% வட்டியும் வழங்க வேண்டும்.**
3. **வாதி தரப்பில் ரூ.8,178/- செலவு தொகை பட்டியல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

### **<u>செலவுத் தொகை விபரம்</u>**

| வ. எண். | விபரம் | வாதி தரப்பில் செலவுத் தொகை ரூ. பை. | பிரதிவாதி தரப்பில் செலவுத் தொகை ரூ. பை. |
|---|---|---|---|
| 1. | பிராதுக்கு நீதிமன்ற கட்டணம் | 4,668.00 | -- |
| 2. | வக்காலத்துக்கு | 10.00 | -- |
| 3. | மூத்த வழக்கறிஞர் கட்டணம் | 3,500.00 | -- |
| | **மொத்தம்** | **8,178.00** | **--** |

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாளன்று என்னுடைய கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

SATHISH Digitally signed by SATHISH

**சார்பு நீதிபதி,**
**அருப்புக்கோட்டை.**

---------------

**தீர்ப்பாணை**
**OS.No.90/2026**
நாள்: 25.06.2026
சார்பு நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை

---------------